தீபாவளிக் கவிதை : தீபத் திரு நாளில்

Written by - கவிப்புயல் இனியவன் -
Wednesday, 18 October 2017 22:51 - Last Updated Wednesday, 18 October 2017 22:53

தீபத் திரு நாளில்......
தீய எண்ணத்த எரித்துவிடு.....
தீய செயலை தூக்கியெறி......
தீய பார்வையை மறைத்துவிடு.....
தீய பேச்சை துப்பியெறி......
தீய தொழிலை செய்யாதே......!

தீங்கு செய்வாரோடு சேராதே......
தீச்சொல் கூறி திரியாதே.......
தீயவை எல்லாம் ஒழித்துவிடு.......
தீப காந்திக்கல் பேரால் வாழ்........
தீம் சொல்லால் பேசு..........
தீரம் கொண்ட செயல் செய்.....
தீர்த்தன் அருளை பெற்றுக்கொள்.....!

இனிய
இனிப்பான
இனிய தீபாதிருநாளின்
இனியவனின்
இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

<kavikiniyavan@gmail.com>

1 / 1